உங்களுக்குக் கொடுக்கப்பட்ட இரத்த தானத்துக்கான கிட் மிகவும் சுத்தமாக நோய் நுண்மங்கள் ஒழிக்க பெற்றதாக செய்யப்பட்டது. ஒவ்வொரு முறை இரத்த தானம் செய்த பிறகு தூக்கி எறியப்படும். நீங்கள் தானமாக வழங்கும் இரத்தம் மற்றொருவர் தானமாக வழங்கும் இரத்தத்துடன் எவ்விதமாகவும் சேர்க்கப்படாது. ஏபெரிஸிஸ் (Apheresis) மெஷினுடனும் எவ்வித தொடர்பும் இருக்காது.

## அடிக்கடி நீங்கள் எவ்வளவு இரத்த தானம் செய்யலாம்?

தட்டை அணுக்களை மட்டும் தானம் செய்வது எனில் ஒரு முறை வழங்கியதும் 48 மணி நேரத்திற்கு பிறகே மீண்டும் கொடுக்கலாம். ஆனால் ஒரு வருடத்தில் 24 முறைக்கு மேல் கொடுக்கக்கூடாது. மேலும் தானம் கொடுக்கும் மையம், எந்தவிதமான செயல்முறை பின்பற்றப்படுகிறது, நீங்கள் அதற்கு முன்பு இரத்ததானம் கொடுத்த விவரங்கள் அடிப்படையில் கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்.

## இரத்ததானம் வழங்கிய பிறகு என்ன நடக்கும்?

சிறிது நேரத்திற்கு நீங்கள் ஓய்வெடுக்கும்படி அறிவுறுத்தப்படுவீர்கள். கொஞ்சம் சிற்றுண்டியும் வழங்கப்படும்.

இரத்ததானம் கொடுத்த பிறகு, நிறையத் தண்ணீர், திரவங்கள் எடுத்துக் கொள்வது நல்லது. 24 மணி நேரத்திற்குக் கடுமையான உடற்பயிற்சிகள் செய்தல், அதிக பளு தூக்குதல், ஆபத்து விளைவிக்கக் கூடிய விளையாட்டுகள் ஆகியவற்றைத் தவிர்க்கவும்.

## மேலும் விவரங்கள்

உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தாலும், எங்களைப் பாராட்ட விரும்பினாலும், எங்கள் மீது புகார் செய்ய நினைத்தாலும் எங்களது இரத்த வங்கி எண் **044-66667718**-ல் அழைக்கலாம். எங்கள் பணியாளர்கள் எப்போதும் உதவ தயாராக இருப்பார்கள்.

**24 மணி அவசர சேவைக்கு**

**044-6666 7788**


rela institute

Dr. ரேலா இன்ஸ்டிட்யூட் & சிகிச்சை மையம்

உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சைகள்

எண். 7, சி.எல்.சி ஒர்க்ஸ் ரோடு, குரோம்பேட்டை

சென்னை - 600 044. தமிழ்நாடு, இந்தியா

+ 91 44 6666 7777 / டோல்ஃப்ரீ: 1800 258 6677

info@relainstitute.com www,relainstitute.com

ஜே ஆர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஆஸ்பிட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் ஒரு யூனிட்


rela institute

Dr. ரேலா இன்ஸ்டிட்யூட் & சிகிச்சை மையம்

உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சைகள்

# இரத்தம் செலுத்தும் சிகிச்சை பிரிவு

**தட்டை அணுக்களை தானம் செய்யுங்கள்**



**உயிர் காக்க உதவுங்கள்**

"வாருங்கள் மற்றும் பிளேட்லெட்டுகளை தானம் செய்து அந்த உன்னதமான பெருமிதத்தை உணருங்கள்"

www.relainstitute.com




## தட்டை அணுக்கள் (பிளேட்லெட்கள்) என்றால் என்ன?

நமது இரத்தத்தில் சிவப்பணுக்கள், வெள்ளை அணுக்கள், தட்டை அணுக்கள், பிளாஸ்மா போன்ற கூறுகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு தனி வேலையைச் செய்து வருகிறது. தட்டை அணுக்கள், இரத்தத்தை உறைய வைக்கும் மிகச் சிறிய செல்கள். காயம் பட்ட இடத்தில் இவை உடனடியாக சேர்ந்து கொண்டு, இரத்தம் உறைவதற்கு தேவையானவற்றை பிளாஸ்மாவில் வேகமாக இயங்கச் செய்கின்றன. உடனே இரத்தம் உறைகிறது. காயம் ஆறத் தொடங்குகிறது.

## தட்டை அணுக்கள் (பிளேட்லெட்கள்) யாருக்குத் தேவை?

உயிரைக் காப்பதற்காக செய்யக்கூடிய பல சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகளில், தட்டை அணுக்களைச் செலுத்துவது அவசியமாகிறது. பெரும்பாலும் மாற்று உறுப்புகள் பொருத்தப்படுபவர்கள், எலும்பு மஜ்ஜை பொருத்தப்படுபவர்கள், இதய அறுவை சிகிச்சை செய்யப்படுபவர்கள், புற்றுநோய், இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள், மிக தீவிரமாகக் காயம் அடைந்தவர்கள், டெங்கு போன்ற தீவிர காய்ச்சல் / தொற்று உடையவர்கள் ஆகியோருக்கு பெரும்பாலும் தட்டை அணுக்கள் செலுத்தப்படுகின்றன. தட்டை அணுக்களை 5 நாட்கள் மட்டுமே வைத்துப் பயன்படுத்த முடியும் என்பதனால் எப்போதுமே தட்டை அணுக்களுக்கான தேவை தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கிறது.

## ஏபெரிஸிஸ் என்பது என்ன?

தட்டை அணுக்களை மட்டுமே தானமாகக் கொடுப்பது ஏபெரிஸிஸ் என்று வழங்கப்படுகிறது. இந்த முறையில் இரத்தத்தின் ஒரு கூறான (பிளேட்லெட்கள்) மட்டும் பிரித்துப் பெறப்படுகின்றன.

பொதுவாக தட்டை அணுக்களை தானமாக வழங்க 1 முதல் 2 மணி நேரம் வரை ஆகலாம்.

## ஏன் இரத்த தானம் பெறாமல் தட்டை அணுக்கள் மட்டும் தானமாகப் பெறப்படுகின்றன?

ஒரு முறை இரத்த தானம் ஒருவர் வழங்கும் போது 50 மிலி தட்டை அணுக்களை மட்டுமே சேகரிக்க முடியும். எனவே ஒரு நபருக்குத் தேவையான தட்டை அணுக்களைச் சேகரிக்க 6 நபர்களின் இரத்த தானம் தேவைப்படும்; ஆனால் தட்டை அணுக்களை மட்டும் ஒருவர் தானம் வழங்கும் போது, அதுவே ஒருவருக்கு செலுத்துவதற்குப் போதுமானது. சாதாரணமாக இரத்த தானம் வழங்கும் போது கிடைக்கும் தட்டை அணுக்களைப் போல இது 6 மடங்கு அளவு கிடைக்கும்.

## தட்டை அணுக்களை தானமாக வழங்க யார் தகுதியானவர்?

பொதுவாக தட்டை அணுக்களை தானமாக அளிக்க விரும்புவர்கள் கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற வேண்டும்.

- ஆண்கள் 18-65 வயதுக்குட்பட்டவர்களாகவும், 50 கிலோவிற்கு மேல் எடை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.
- உங்கள் கையில் உள்ள இரத்த நாளங்களை எளிதில் அறிய முடிய வேண்டும் (Venous access)
- இரத்த தானம் வழங்குவதற்கு 3 நாட்களுக்குள் ஆஸ்பிரின் / வீக்கத்தை எதிர்க்கும் மருந்துகளை எடுத்துக் கொள்ளக் கூடாது.
- எவ்விதமான தொற்றும் அப்போது அவருக்கு இருக்கக்கூடாது. மேலும் இரத்தம் செலுத்தும் போது ஏற்படக்கூடிய தொற்றுகளும் அவருக்கு வருவதற்கான சாத்தியங்கள் இருக்கக்கூடாது.

## இதை எப்படி சேகரிப்பார்கள்?

நீங்கள் தட்டை அணுக்கள் தானம் வழங்க வந்தவுடன், உங்கள் மருத்துவப் பின்னணியை முழுவதுமாக தெரிந்து கொள்வார்கள். பின்பு உங்களை பரிசோதித்து முக்கிய காரணிகளை (Vital Signs) சரிபார்ப்பார்கள். மிகச் சிறிய அளவு இரத்தத்தை எடுத்து "முழு இரத்த எண்ணிக்கை" (CBC) சரிபார்த்து, தொற்று இல்லையா என்றும் உறுதி செய்து கொள்வார்கள்.

பிறகு உங்களை ஏபெரிஸிஸ் மெஷினுடன் இணைத்து, எடுக்கத் தொடங்குவார்கள். உங்கள் கையில் ஒரு ஊசியைச் செலுத்துவார்கள் - அதன் வழியாக உங்கள் இரத்தம் ஒரு சிறு குழாய் மூலம் மெஷினுக்கு வரும். மெஷினுக்குள் சென்ட்ரிஃப்யூஜ் சுழன்று, இரத்தத்திலிருந்து அதன் கூறுகளைப் பிரித்து எடுக்கும். தட்டை அணுக்கள் மற்றும் சிறிதளவு பிளாஸ்மா ஆகியவை பிரித்தெடுக்கப்பட்டு சிவப்பு அணுக்கள் திருப்பி உங்கள் உடலுக்குள் செலுத்தப்படும்.

## இத்தகைய ஏபெரிஸிஸ் தானங்கள் பாதுகாப்பானவையா?

ஆம். ஒவ்வொரு தானமும், நல்ல பயிற்சி பெற்ற, அக்கறை மிகுந்த பணியாளார்களால் கவனமாகக் கண்காணிக்கப்படும்.

உங்கள் உடலில் உள்ள தட்டை அணுக்களில் மிகச் சிறிய அளவே எடுக்கப்படுகின்றன. எனவே இரத்தப் போக்கு ஏற்படும் அபாயம் இல்லை. இவை 48 மணி நேரத்தில் உங்கள் உடலில் மீண்டும் உற்பத்தியாகிவிடும்.